Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: illipn@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160913T

## எதிர்கால சந்ததியினருக்காக இலங்கைப் பாரம்பரிய நடனங்களைப் பேணுவதற்கு ஐக்கிய அமெரிக்கத் தூதுவரின் நிதியுதவி

**செப்ரெம்பர் 13, 2016:** இலங்கையின் கலாசார மரபுரிமைகளைப் பேணுவதற்கு ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் ஒரு பகுதியாக அமைகின்றது. ஐக்கிய அமெரிக்கா பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு நான்கு பாரம்பரிய நடனக் கலை வடிவங்களையும் அவை தொடர்பான கலைகளையும் பாதுகாப்பதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் நிதியுதவியினை வழங்கியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் அத்துள் கேசாப், ‘‘நாம் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் ஒரு பங்காளியாக இணைந்து அதனுடைய குறிக்கோளான இலங்கையின் கலாசார நடைமுறைகளின் சிறந்த பன்முகத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அதனுடைய குறிக்கோளில் பங்கெடுத்துக் கொள்வதில் பெருமையடைகின்றோம் என்றும் ‘‘இலங்கையின் எதிர்கால சந்ததியினருக்கு எம்மால் உதவி செய்ய முடியும் என்ற உறுதியும், அவர்களது கலாசார மரபுரிமைகளின் முக்கியமான கூறுகளின் அனுபவமும் இவ்வாறு ஒன்றாக இணைந்து பணியாற்றுவதில் உள்ளன என்றும் கூறியுள்ளார்.

பின்வரும் அரங்கக் கலைகளின் பாரம்பரியங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறைக்கு 16. 7 மில்லியன் (115,000 அமெரிக்க டொலர்) நிதியுதவி வழங்கப்படும். 1) மலையக கண்டியன் கொஹொம்ப கங்கரியன் நடனம் 2) வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ்க் கூத்து, நாட்டுக் கூத்து 3) மட்டக்களப்பு, பொநறுவை மாவட்டங்களில் உள்ள ஆதிவாசிகளின் சடங்கு முறைகளும் கலாசார நடைமுறைகளும் 4) மாத்தறையில் உள்ள கோலம் பாரம்பரியத்தின் தென்பகுதி நாட்டிய நாடக சடங்குரீதியான செயல்கள்.

நுண்கலைத் துறை இந்த தனிப்பட்ட நடனங்களின் ஒளிப்பதிவினை மேளங்கள், கலைகளுக்கான பிரத்தியேக ஆடைகள் போன்ற நூல்களையும் மூலப்பொருட்களுக்கான சிக்கல்களையும் தமது

பக்க வாத்தியங்களுடன் ஆவணப்படுத்தும். ஒரு தடவையின் முடிவாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைகள் பேரவை முகாமைத்துவத்தின் கீழ் முழுமையாக அணுகக்கூடிய பதிவுகள் காப்பகமாக இச் செயற்றிட்டமானது விளங்குகின்றது. பொது மக்களுக்கான மற்றும் இணையத்தள வழியான நேரடித் தொடர்பு ஆலோசனைகளுக்கு பல்கலைக்கழகத்தின் கலைகள் பேரவை மற்றும் நுண்கலைத்துறைகளின் இணையத்தளங்களில் கிடைக்கக்கூடியதாகவும் ஆங்கிலம் மற்றும் தாய்மொழிகளில் பார்வையிடும் வகையில் குறும் ஒளிப்பதிவு வீடியோக்கள் உள்ளன.

உலகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கலாசாரப் பக்கங்கள், மூலப் பொருளின் குறிக்கோள்கள் மற்றும் ஏனைய கலாசார வெளிப்பாட்டு வடிவங்கள் என்பவற்றின் பபாதுகாப்பிற்கு ஆதரவு வழங்குவதற்கு 2001 இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச திணைக்களம் கலாசாரத்தைப் பேணுவதற்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவரின் நிதியுதவின் கீழ் (AFCP) ஒரு நிதி வழங்கல் திட்டத்தை உருவாக்கியுள்ளது. 2005 இல் இலங்கை AFCP இன் தொடக்கத்திலிருந்து கொழும்பு தூதரகம் கிட்டத்தட்ட மொத்தமாக 126 மில்லியன் ரூபாவை (900,000 அமெரிக்க டொலர்) 12 பாதுகாப்புச் செயற்றிட்டங்களுக்காக வழங்கியது.

# # #



மட்டக்களப்பிற்கு அருகே ஆதிவாசி சமூக உறுப்பினர்களின் கிரி கொறஹ சடங்காசாரத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்



கொஹொம்ப கங்கரிய நடனக்காரர்களின் புகைப்படம்



வடக்கு மற்றும் கிழக்கு தமிழ்ச சமூகத்தில் பாரம்பரிய நாட்டுக்கூத்தில் ஆண் நடனக் கூத்துக்காரர் தமது பாரம்பரிய கலாசார உடையில் இருக்கும் புகைப்படம்



பாரம்பரிய சடங்கு நடனத்தில் உபயோகிக்கப்படும் மேள வகைகளையும் மூலப்பொருட்களையும் பாதுகாப்பதற்குரிய ஆவண நுட்பவியலாளர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

## கலாசாரப் பேணுகைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் நிதி

கலாசார மரபுரிமை நிலையம் - கல்வி மற்றும் கலாசார விவகாரப் பணியகம் - ஐக்கிய அமெரிக்க அசாங்கத் திணைக்களம்

2005 இல் இலங்கை AFCP இன் நிதி வழங்கல் திட்டம் தொடக்கம் ஐக்கிய அமெரிக்காவின் கொழும்புத் தூதரகம் கிட்டத்தட்ட மொத்தமாக 126 மில்லியன் ரூபாவை (கிட்டத்தட்ட 900,000 அமெரிக்க டொலர்) 12 பாதுகாப்புச் செயற்றிட்டங்களுக்காக வழங்கியுள்ளது.

இச்செயற்றிட்டங்களானவை ரஜகலவில் உள்ள புதைபொருள் பாதுகாப்பு, கிழக்கு மாகாணத்தில் உள்ள பரந்த மடாலயத் தொகுதி, இலங்கையிலுள்ள மிகவும் பிரசித்தி பெற்ற கோட்டைகளின் வரலாற்று ஆவணமாக்கலும் மீள் பாதுகாப்பும், அரசாங்க திரைப்பட அலகுடன் இணைந்து திரைப்படப் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கும் வகையில் வரலாற்றுக் காலங்கள் மற்றும் பிராந்தியங்களின் எண்ணிக்கை மீது தமது எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளன. அநுராதபுரத்திலுள்ள தொல்பொருள் காட்சியகத்தில் பொதுமக்களின் கைத்திறன்களின் சேகரிப்பு, சிலைகள் மற்றும் ஏனைய தொல்பொருட்கள் என்பவற்றை சிறந்த முறையில் முகாமை செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் AFCP நிதியானது இலங்கையின் புதைபொருளாய்வுத் திணைக்களத்திற்கு ஆதரவு வழங்கியது.

ஐக்கிய அமெரிக்க அரசாங்கத் திணைக்களம் மிகவும் உன்னதமான மனிதாபிமான கலாசார அடைவுகளின் உன்னதத்தினைப் பாதுகாக்கும் அதனுடைய குறிக்கோளுக்குரிய ஒரு மையமாக ஏனைய நாடுகளுக்கும் தமது கலாசார மரபுரிமைகளை பாதுகாத்துக் கொள்ள உதவி செய்வது தொடர்பாக எண்ணுகின்றது. உலகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கலாசாரப் பக்கங்கள், மூலப் பொருளின் குறிக்கோள்கள் மற்றும் ஏனைய கலாசார வெளிப்பாட்டு வடிவங்கள் என்பவற்றின் பாதுகாப்பிற்கு AFCP நிதியானது ஆதரவு வழங்குகின்றது.

ஐக்கிய அமெரிக்கத் தூதரகமானது நான்கு பாரம்பரிய நடன வடிவங்கைளப் பாதுகாப்பதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட கண்டியன், தமிழ், வேடர் மற்றும் தென் மாகாண சமூகத்திலுள்ள சடங்காசார நடைமுறைகள், கலைகள் போன்றவற்றிற்கும் ஆதரவு வழங்கும் வகையில் தனது 2016 AFCP நிதியுதவியினைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதைப் பெருமையுடன் அறியத்தருகின்றது.

“இலங்கையின் எதிர்கால சந்ததியினருக்கு இலங்கையின் கலாசார மரபுரிமைகளின் முதன்மையான கூறுகளைப் பாதுகாக்கின்ற உறுதிப்பாட்டை ஒன்றாக இணைந்து பணியாற்றுவதனூடாக எம்மால் உதவ முடியும்.